# முல்லைப்பெரியாறு பிரச்சினை குறித்து

## தி.மு. கழகச் செயற்குழு தீர்மானம் – 9.12.2011

கேரள அரசும், மத்திய அரசும் கேரளாவில் தமிழ்நாட்டு மக்களுக்கு விரோதமாக நடைபெறும் வன்முறைச் செயல்களை தடுத்து நிறுத்தாமல், இந்த நிலைமை அங்கே தொடருமேயானால் கழகத்தின் செயற்குழு கூடி உரிய முடிவெடுக்கும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதற்கிணங்க கழகத்தின் செயற்குழு இன்று (9–12–2011) இங்கே கூடியுள்ளது.

இந்திய உச்ச நீதி மன்றத்தின் விசாரணையில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை இருந்து வரும்போது, கேரள அரசு புதிய அணை கட்டவும், நீர் மட்டத்தைக் குறைத்திடவும் முயற்சிப்பது முற்றிலும் நியாயமற்றது என்பதால், தமிழகம் எதிர்ப்பு தெரிவிப்பதையொட்டி; அதனால் ஏற்பட்டுள்ள ஆத்திரத்தில் தமிழகத்திலிருந்து வரும் வாகனங்களைத் தாக்கி கேரளாவில் உள்ள அரசியல் கட்சியினரும், சமூக விரோதிகளும் கடந்த சில நாட்களாக வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நீதி மன்ற நடவடிக்கைக்குப் புறம்பாக திடீரென கேரளாவில் உள்ள ஒரு சிலர் அரசியல் நோக்கில் மேற்கொண்ட செயல்பாடுகளின் காரணமாக கேரள, தமிழக மாநிலங்களில் உள்ள எல்லை மாவட்டங்களில் பரபரப்பும் பதற்றமுமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இரு மாநிலங் களுக்கிடையே பாரம்பரியமாகப் பல முனைகளிலும் பேணப்பட்டு வரும் பன்னெடுங்கால உறவும், நட்பும், மனித நேயமும் பங்கப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு நாட்டு நலனில் அக்கறை உள்ள அனைவரது உள்ளங்களிலும் எழுந்துள்ளது.

ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், தமிழகத்துக்கும் கேரள மாநிலத்துக்கும் உள்ள வரலாற்று ரீதியான உறவு எவ்வளவு வலுவானது, உண்மையானது என்பதை உணர்ந்திட முடியும். மூவேந்தர்களில் சேர மன்னர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள், தமிழகத்திலும் – தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் கேரளத்திலும் பெரிதும் மதித்து போற்றப்பட்டு வருகிறார்கள். சாதி சமயமற்ற சமுதாயம் காண பாடுபட்ட நாராயண குரு அவர்களை தமிழகத்தின் சமுதாயச் சீர்திருத்த இயக்கம் என்றென்றைக்கும் நினைவிலே கொண்டு பாராட்டி வருகிறது. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் கேரள மாநிலம் வைக்கத்தில் நடத்திய போராட்டம் வரலாற்றேடுகளில் இடம் பெற்றுள்ளது. கேரளத்தைச் சார்ந்த டாக்டர் டி.எம். நாயர் திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். இத்தகைய உன்னத உறவும் நினைவுகளும் என்றென்றைக்கும் நின்று நிலைத்திட வேண்டுமேயல்லாமல் அதை யாரும் சீர்குலைத்திட அனுமதிக்கலாகாது.

மாநிலங்களுக்கிடையே தகராறுகள் வந்து விடக் கூடாது என்பதற்காகத் தான் நான்காண்டுகளுக்கு முன்பே 29–5–2007 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் உரையாற்றிய அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், “மாநிலங்களுக்கு இடையிலான நதிகளை நிர்வகிப்பதற்கான நமது தற்போதைய நிறுவன நடைமுறை செயலிழந்து போய் விட்டதாகத் தெரிகிறது, புதிய ஒரு நிறுவன நடைமுறையை நாம் ஏற்படுத்தாவிடில், நதி நீர்ப் பங்கீடு என்பது மாநிலங்களுக்கு இடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் ஒரு பிரச்சினையாக மாறலாம். இது சரியான நேரத்தில் முறையாகக் கவனிக்கப்படாவிடில், எதிர் வரும் காலங்களில் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாகக் கூட அமைந்து விடக் கூடும்” என்று எச்சரிக்கை விடுத்ததையும்; “பெரியாறு அணையில் 142 அடி வரையில் தண்ணீர் தேக்கினால் எந்தப் பாதிப்பும் வராது. பூகம்பமே வந்தாலும் அந்த அணை தாங்கும். எனவே உச்ச நீதி மன்றத் தீர்ப்பை நிறைவேற்ற கேரள அரசு முழு

மனதுடனும், மனிதாபிமானத்துடனும் ஒத்துழைக்க வேண்டும்" என்று விடுத்த வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

பெரியாறு அணை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அணையாகும். ஆசியா கண்டத்தில் முதன் முதலாக ஒரு ஆற்றுப்படுகையில் ஓடும் நீரை பயனுள்ள வகையில் மற்றொரு ஆற்றுப்படுகைக்கு திருப்புவதற்காக கட்டப் பட்ட அணையாகும் பெரியாறு அணை. முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டத்தை அதன் முழுக் கொள்ளளவான 152 அடிக்கு உயர்த்துவது குறித்த பிரச்சினை – தமிழகத்திற்கும் கேரள மாநிலத்திற்குமிடையே நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது. 1979ஆம் ஆண்டில் கேரள அரசு பெரியாறு அணையின் பாதுகாப்பு பற்றி ஒருசில அச்சங்களை எழுப்பியதைத் தொடர்ந்து அந்த அச்சங்களையும் போக்குவதற்காக தமிழக அரசின் சார்பில் அணையைப் பலப்படுத்தும் பணிகள் முடிந்து விட்ட நிலையிலும்கூட, பெரியாறு அணையின் நீர் மட்டம் 136 அடியிலேயே வைக்கப்பட வேண்டுமென்று கேரள அரசு பிடிவாதமாக வலியுறுத்தி வந்தது. இதுகுறித்து இரு மாநிலங்களுக்கிடையே பல முறை பேச்சுவார்த்தைகள் நடந்த போதிலும் எந்த விதமான ஒருமித்தக் கருத்தும் எட்டப்படவில்லை.

தி.மு. கழகம் 2006ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், உச்ச நீதி மன்றத்தின் 25–9–2006 தேதியிட்ட ஆணையின்படி மத்திய நீர்வள ஆதார அமைச்சர் அவர்கள் தமிழக, கேரள அமைச்சர்களிடையே பேச்சுவார்த்தை நடத்துவதில், தமிழக அரசு கலந்து கொள்வது பற்றி, 23–10–2006 அன்று முதல் அமைச்சர் என்ற முறையில் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை தலைவர் கலைஞர் கூட்டியபோது, அ.தி.மு.க. சார்பில் இன்று அமைச்சர்களாக இருக்கும் திரு. ஓ. பன்னீர்செல்வமும், திரு. கே.ஏ. செங்கோட்டையனும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிய

தீர்மானத்தில், “முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து தமிழக அரசின் சார்பாக எடுத்து வைத்த நியாயங்களை ஏற்றுக் கொண்டு உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு முன் வராத கேரள அரசின் போக்கைச் சுட்டிக் காட்டி, உச்ச நீதி மன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையாக மத்திய அரசு முன்னிலையில் தமிழக அரசு கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இக்கூட்டம் இணக்கம் தெரிவிக்கிறது என்றாலும்; அதிலும் உரிய பலன் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் உடனடியாக உச்ச நீதி மன்றத்தையே அணுகி, உச்ச நீதி மன்றம் ஏற்கனவே 27–2–2006இல் பிறப்பித்த உத்தரவான அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உத்தர வளிக்குமாறு முறையீடு செய்து கொள்வதென்று” கேட்டுக் கொண்டோம்.

முல்லைப் பெரியாறு அணை பலம் வாய்ந்தது என்று உச்ச நீதி மன்றமே தீர்ப்பளித்திருக்கின்றது. கேரள அரசின் தலைமை வழக்கறிஞரே முல்லைப் பெரியாறு அணை உரிய பலத்துடன் இருப்பதாகவும் 142 அடி நீரைத் தேக்கி வைக்கலாம் என்றும்; அணை பாதிக்கப்பட்டால், அந்த அணையின் நீரை இடுக்கி, செறுதோணி, குளமாவு அணைகளில் தேக்கி வைக்க முடியுமென்றும் கூறியிருக்கிறார். இந்தக் கருத்து குறித்து கேரள உயர் நீதி மன்றம், தனது திருப்தியைத் தெரிவித்துள்ளது. முல்லைப் பெரியாறு பிரச்சினையில் இந்திய உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்று வரும் விசாரணையின் ஒரு கட்டமாக; உச்ச நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு ஏ.எஸ். ஆனந்த் அவர்களின் தலைமையிலே நியமிக்கப்பட்டு, கேரள அரசும் தமிழக அரசும் இடம் பெற்றுள்ள ஐவர் குழு முல்லைப் பெரியாறு அணையைப் பார்வையிட்டதோடு, மீண்டும் பார்வையிட்டு அறிக்கை அளித்திடவுள்ளது.

1956ஆம் ஆண்டு இந்திய மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட போது தமிழகம் தேவி குளத்தையும் பீர்மேட்டையும் கேரள மாநிலத்திற்கு விட்டுக் கொடுத்தது. அதைப் போலவே 1886 அக்டோபர் 29ஆம் நாள் ஏற்பட்ட ஒப்பந்த சாசனத்தின்படி தமிழகத்திற்கு 999 ஆண்டுகளுக்கான குத்தகை உரிமைகள் கேரள அரசின் பிடிவாதப் போக்காலும் அத்துமீறிய அணுகுமுறையாலும் ஒவ்வொன்றாகப் பறி போய் விட்டன. இந்த நிலையில், முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாத்திட மத்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், அணைப் பகுதி உள்ள இடத்தை கேரள மாநிலப் போலீசார் காவல் காத்து வருவதற்குப் பதிலாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில் மத்திய பாதுகாப்பு படையினரின் பொறுப்பில் விட வேண்டுமென்றும், அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த அனுமதிக்க வேண்டுமென்று 2006ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றம் கேரள அரசுக்கு உத்தரவிட்டதை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டுமென்றும் தி.மு. கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 4–12–2011 அன்றே உச்ச நீதி மன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் அவர்களுக்கு அவசரக் கடிதமாக எழுதியிருக்கிறார்கள்.

இரு மாநிலங்களும் தமது சமூக – பொருளாதார வாழ்வு மேம்பாட்டுக்கு ஒன்றையொன்று சார்ந்தே இருந்திட வேண்டும் என்பது இயற்கையாகவே பூகோள ரீதியாக உருவாகியுள்ள நிலைமை ஆகும். எனவே இரு மாநிலங்களுக் கும் இடையிலான உறவுப் பாலங்கள், ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு; பிரச்சினைகளை அணுகுவதற்கு மாறாக, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக, நீண்ட நெடிய வரலாற்று அடிப்படையிலான உறவைக் காயப்படுத்திட எண்ணினால்; வரலாறு நிச்சயம் மன்னிக்காது என்பதை அருகருகே உள்ள இரண்டு மாநிலங்களின் மக்களும் குறிப்பாக அரசியலாளர்களும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தச் செயற்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

கழகத்தின் இந்த நோக்கங்களையும், கருத்துக்களையும் வலியுறுத்திடும் வண்ணம், இந்தப் பிரச்சினையில் தமிழகத்தின் உறுதிப்பாட்டை நிலைநாட்டு வதற்கும், தமிழன் யாருக்கும் தாழமாட்டான்; யாரையும் தாழ்த்த மாட்டான் என்பதை அறப்போர் முரசமாக ஒலிப்பதற்கும், மத்திய அரசின் உடனடியான கவனத்தை ஈர்ப்பதற்கும்; வருகிற 12–12–2011 திங்கள் கிழமையன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகரங்களிலும், நகரங்களிலும், காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் ஒரு நாள் உண்ணா விரதத்தில் ஈடுபடுவதென்றும், அதற்கடுத்து 15–12–2011 வியாழக்கிழமையன்று முல்லைப்பெரியாறு அணையினால் பாசன வசதி பெறும் தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ராமனாதபுரம் மாவட்டங்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை மாபெரும் “மனிதச் சங்கிலி” அணிவகுப்பு நடத்துவதென்றும் இச்செயற்குழு முடிவு செய்கிறது.

***